செ.வெ.எண் : 22 / ஆகஸ்ட் நாள் : 09.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் மாவட்ட தொழில்மையத்தின் மூலம் கடனுதவி பெற விரும்புவோர் இணையதளம் மூலம் நேரடியாக விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் மாவட்ட தொழில்மையத்தின் மூலம் கடனுதவி பெற விரும்புவோர் www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதளம் மூலம் நேரடியாக விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இளையோரை ஊக்கப்படுத்தி அவர்தம் வளமான வாழ்விற்கு வழிகாட்ட தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு மாவட்ட தொழில் மையங்களின் மூலம் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டமான படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் நேரடியாக விண்ணப்பம் செய்வதில் ஏற்படும் காலதாமத்ததை தவிர்க்கும் பொருட்டும், எளிதாக விண்ணப்பிக்கும் வகையிலும், ஒவ்வொரு கட்டத்திலும் விண்ணப்பத்தின் நிலையை அறியும்படியாகவும் 01.08.2017 முதல் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பெஞ்சமின் அவர்களால் இத்திட்டம் இணையதளமாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கடன் பெற விரும்புவோர் www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதளத்தில் நேரடியாக விண்ணப்பிக்கலாம் இத்திட்டத்தில் கடன் பெற விரும்புவோர் குறைந்தபட்ச கல்வித்தகுதி 8ம் வகுப்பு தேர்ச்சியுடன் 18 வயதிற்கு மேல் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும், சிறப்புபிரிவினர் 45 வயது வரை இருக்கலாம். திட்ட முதலீட்டில் மானியம் 25% விழுக்காடு, அதிகபட்ச மானியம் ரூ.1,25,000/- குடும்ப ஆண்டுவருமானம் ரூ.1,50,000/- க்குள் இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 2017-18ம் ஆண்டிற்கு மானியமாக ரூ.36.67 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இதுவரையிலும் இத்திட்டத்தின் கீழ் குறைவான விண்ணப்பங்களே பெறப்பட்டுள்ளதாலும், ஏராளமான இளம் தொழில் முனைவோர் மானியத்துடன் தொழில் கடன் பெற வாய்ப்புள்ளதாலும் இந்த அரிய வாய்ப்பை இளைஞர்கள் அதிக அளவில் பயன்படுத்தி தொழிற்கடன் பெறுவதற்கு இணையதளம் மூலம் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், இராமநாதபுரம்- அவர்களை நேரில் தொடர்பு கொள்ளலாம் (அலுவலக தொலைபேசி எண்: 04567 230497)

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**